பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு

## இலங்கைத் தேயிலைச் சபை

# வெற்றிடங்கள்

இலங்கைத் தேயிலைச் சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் தொகையினுள் தேயிலைத் தொழிற்துறையின் கட்டுப்பாடு, அபிவிருத்தி மற்றும் விற்பனை மேம்பாட்டுப் பணிகளை நிறைவேற்றுவதற்காகச் செயற்படும் முதன்மை அரச நிறுவனமான இலங்கைத் தேயிலைச் சபையில் காணப்படும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காகத் தகுதி பெற்ற, கடமைக்கு உரியவர்களும் சுறுசுறுப்பானவர்களும் ஆன இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## 01. உதவித் தேயிலை ஆணையாளர் (II ஆம் வகுப்பு) - (MM 1-1) - வெற்றிடங்கள் 01

**பணிச் சுயவிவரம்:**

தேயிலை ஆணையாளரின் நிர்வாகம், வழிகாட்டல் மற்றும் மேற்பார்வையின் கீழ், 1957 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க மற்றும் 1959 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க தேயிலைக் கட்டுப்பாட்டுச் சட்டங்களின் ஏற்பாடுகளுக்கு அமைய 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள தொடர்பான செயற்பாடுகளைச் செய்தலும், 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளைச் செயற்படுத்தலும்.

**கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்:**

**வெளியக விண்ணப்பதாரர்கள்:**

(அ) இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து கிராமியப் பொருளியல் / விஞ்ஞானம் / வர்த்தகம் / பொருளியல் / பொது நிர்வாகம் / முகாமைத்துவம் ஆகிய பாடங்களுக்கு முதன்மை வழங்கி பெறப்பட்ட பட்டம் ஒன்றையும், அத்தகுதியைப் பெற்ற பின்னர் அரசாங்கத் துறையில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் குறைந்தபட்சம் மூன்று (03) வருடங்களின் அனுபவத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

**அகவக விண்ணப்பதாரர்கள் (அ) அல்லது (ஆ):**

(அ) இலங்கைத் தேயிலைச் சபையின் முகாமைத்துவ ஆதரவுச் சேவைகள் வகுப்பு I இல் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்களின் திருப்திகரமான சேவை.

(ஆ) இலங்கைத் தேயிலைச் சபையின் உதவித் தேயிலை ஆணையாளர் II ஆம் வகுப்புப் பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதி பெறுவதற்காக நடாத்தப்படும் வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து, இலங்கைத் தேயிலைச் சபையில் குறைந்தபட்சம் பத்து (10) வருடங்களின் திருப்திகரமான சேவையை நிறைவு செய்த தேயிலை ஆலோசகர் / பரிசோதகர் - முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப) I ஆம் வகுப்பு உத்தியோகத்தர்கள்.

**தெரிவு செய்யும் முறை:**

வெளியக விண்ணப்பதாரர்களும் அகவக (அ) இன் கீழ் விண்ணப்பிப்பவர்களும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒன்றினால். அகவக (ஆ) இன் கீழ் விண்ணப்பிப்பவர்கள் எழுத்துப் பரீட்சை ஒன்றினாலும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒன்றினாலும்.

**எழுத்துப் பரீட்சைக்கான பாடங்கள் மற்றும் புள்ளிகள்:**

| பாடம் | நேரம் சூ புள்ளிகள் | ஊடகம் |
|---|---|---|
| ✦ மொழித் திறன் | 100 புள்ளிகள் (01 ½ மணி) | ஆங்./சிங். |
| ✦ தகுதி நயப் பரீட்சை | 100 புள்ளிகள் (45 நிமி.) | சிங்./தமிழ் |
| ✦ பாட அறிவு | 100 புள்ளிகள் (03 மணி) | சிங்./தமிழ் |

பரீட்சை ஊடகத்தை விண்ணப்பப் பத்திரத்தில் குறிப்பிடவும். ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தது 40%, மொத்தமாக 50% சராசரி பெற வேண்டும்.

**சம்பள விகிதம் (MM 1-1):**

ரூ. 91,690 - 10 x 2,480 - 15 x 3,450 - ரூ. 168,240/- (மாதாந்தம்). சுற்றறிக்கை 01/2025 இணைப்பு II படி ஆரம்பப் படி ரூ. 81,710/- மற்றும் ஏனைய கொடுப்பனவுகளுடன் ஏறத்தாழ ஷரூ. 124,510/- ஆரம்ப மொத்த சம்பளம்.

**வயது வரம்பு:**

22-45 வயது. அரசாங்க சேவையாளர்களுக்குப் பொருந்தாது.

## 02. வர்த்தக மேம்பாட்டு உத்தியோகத்தர் (II ஆம் வகுப்பு) - (JM1-1) - வெற்றிடங்கள் 01

**பணிச் சுயவிவரம்:**

இலங்கைத் தேயிலைச் சபையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ், இலங்கையின் தேயிலைத் தொழிற்துறையை சர்வதேச மற்றும் உள்நாட்டு மட்டத்தில் மேம்படுத்துவதற்குத் தேவையான வகையில் தேயிலைத் தொழிற்துறை தொடர்பான சந்தைத் தரவுகளைச் சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் மேம்பாட்டுப் பணிகளைச் செய்தல்.

**கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்:**

**வெளியக விண்ணப்பதாரர்கள் (அ அல்லது ஆ):**

(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து விற்பனை / வர்த்தகம் / முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம் ஆகிய துறைகளுக்கு முதன்மை வழங்கி பெறப்பட்ட முதலாம் பட்டமும், பின்னர் தொடர்பான துறையில் குறைந்தது ஒரு வருட அனுபவமும்.

(ஆ) பிரித்தானிய மார்க்கட்டிங் நிறுவனத்தின் முழு அங்கத்துவம் (CIM-UK) மற்றும் பின்னர் தொடர்பான துறையில் குறைந்தது ஒரு வருட அனுபவம்.

**அகவக விண்ணப்பதாரர்கள் (அ அல்லது ஆ):**

(அ) மேலுள்ள வெளியகப் பிரிவின் தகைமைகளை முழுமையாக நிறைவு செய்திருத்தல்.

(ஆ) முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத) II ஆம் வகுப்பில் குறைந்தது 05 வருட சேவை மற்றும் விற்பனை தொடர்பான டிப்ளோமா அல்லது உயர் தகுதி.

**தெரிவு செய்யும் முறை:**

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒன்றினால்.

**சம்பள விகிதம் (JM 1-1):**

ரூ. 72,650 - 10 x 1,360 - 18 x 2,040 - ரூ. 122,970/- (மாதாந்தம்). சுற்றறிக்கை 01/2025 இணைப்பு II படி ஆரம்பப் படி ரூ. 65,633/- மற்றும் ஏனைய கொடுப்பனவுகளுடன் ஏறத்தாழ ரூ. 83,433/- ஆரம்ப மொத்த சம்பளம்.

**வயது வரம்பு:**

22-45 வயது. அகவக விண்ணப்பதாரர்களுக்குப் பொருந்தாது.

## 03. தேயிலை ஆலோசகர் / பரிசோதகர் (III ஆம் வகுப்பு) - (MA 2-1) - வெற்றிடங்கள் 06

**பணிச் சுயவிவரம்:**

இலங்கைத் தேயிலைச் சபையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ், தேயிலை உற்பத்தியாளர்கள், பதப்படுத்தப்படாத தேயிலை விற்பனையாளர்கள், இடைத்தரகர்கள் மற்றும் கொள்ளகங்களின் மேற்பார்வை/பரிசோதனை, மற்றும் ஏற்றுமதியாளர்களின் பரிசோதனை மற்றும் மேற்பார்வை.

**கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்:**

**வெளியக மற்றும் அகவக விண்ணப்பதாரர்களுக்கு:**

(அ) தொழில் சூ தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து கிராமியப் பொருளியல் தொடர்பாக NVQ 05 தரத்திற்குக் குறையாத தகுதி க.பொ.த (உயர் தர) விஞ்ஞானப் பிரிவில் ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தி க.பொ.த (சாதாரண தர) கணிதம்/ஆங்கிலம்/சிங்களம்-தமிழ் உட்பட 05 சித்திகளுடன் ஒரே தடவையில் சித்தி.

**தெரிவு செய்யும் முறை:**

எழுத்துப் பரீட்சை ஒன்றினாலும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒன்றினாலும்.

| பாடம் | நேரம் சூ புள்ளிகள் | ஊடகம் |
|---|---|---|
| ✦ மொழித் திறன் | 100 புள்ளிகள் (01 ½ மணி) | ஆங்./சிங். |
| ✦ தகுதி நயப் பரீட்சை | 100 புள்ளிகள் (45 நிமி.) | சிங்./தமிழ் |
| ✦ பாட அறிவு | 100 புள்ளிகள் (03 மணி) | சிங்./தமிழ் |

பரீட்சை ஊடகத்தை விண்ணப்பப் பத்திரத்தில் குறிப்பிடவும். ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தது 40%, மொத்தமாக 50% சராசரி பெற வேண்டும்.

**சம்பள விகிதம் (MA 2-1):**

ரூ. 50,540 - 10 x 540 - 7 x 630 - 4 x 890 - 201,190 - ரூ. 87,710/- (மாதாந்தம்). சுற்றறிக்கை 01/2025 இணைப்பு II படி ஆரம்பப் படி ரூ. 46,960/- மற்றும் ஏனைய கொடுப்பனவுகளுடன் ஏறத்தாழ ரூ. 64,760/- ஆரம்ப மொத்த சம்பளம்.

**வயது வரம்பு:**

18-45 வயது. அகவக விண்ணப்பதாரர்களுக்குப் பொருந்தாது.

## 04. தனிப்பட்ட உதவியாளர் (III ஆம் வகுப்பு) - (MA 1-1) - வெற்றிடங்கள் 01

**பணிச் சுயவிவரம்:**

இலங்கைத் தேயிலைச் சபையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் அலுவலகப் பணிகளைச் செய்தல்.

**கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்:**

**வெளியக மற்றும் அகவக விண்ணப்பதாரர்களுக்கு:**

(அ) க.பொ.த. (உயர் தர) பரீட்சையில் ஒரே சந்தர்ப்பத்தில் மூன்று பாடங்களில் சித்தியடைதல், மற்றும் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் கணிதம், ஆங்கிலம் மற்றும் சிங்களம்/தமிழ் ஆகிய பாடங்களும் உட்பட 04 சித்திகளுடன் 6 பாடங்களில் இரண்டு சந்தர்ப்பங்களுக்கு மிகாமல் சித்தியடைந்திருத்தல்.

ஆங்கில மொழி குறுக்கெழுத்து (Shorthand) அறிவு கூடுதல் தகுதியாக கருதப்படும்.

**தெரிவு முறை : எழுத்துப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்காணல் மூலம்**

எழுத்துப் பரீட்சைக்கான பாடங்களும் மதிப்பெண் வழங்கும் முறையும்:

| பாடம் | நேரம் சூ புள்ளிகள் | ஊடகம் |
|---|---|---|
| ✦ மொழித் திறன் | 100 புள்ளிகள் (01 ½ மணி) | ஆங்./சிங். |
| ✦ தகுதி நயப் பரீட்சை | 100 புள்ளிகள் (45 நிமி.) | சிங்./தமிழ் |
| ✦ பாட அறிவு | 100 புள்ளிகள் (03 மணி) | சிங்./தமிழ் |
| ✦ கணினி திறன் | 100 புள்ளிகள் (01 மணி) | ஆங்கில ஊடகத்தில் மட்டும் |

பரீட்சைக்கு தோற்ற எதிர்பார்க்கும் மொழி ஊடகத்தை விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட வேண்டும்.

எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய ஒரு பாடத்திற்கு குறைந்தபட்சம் 40% மதிப்பெண்களைப் பெற்றிருத்தலும் மொத்த பரீட்சையில் 50% சராசரியைப் பெற்றிருத்தலும் அவசியமாகும்.

**சம்பள விகிதம்:**

**MA 1-1:** ரூ. 46,220 - 10 x ரூ. 540 7 x ரூ. 630-4 x ரூ. 890 20 x ரூ. 1,190 - ரூ. 83,390 (1666)

முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 01/2025 அட்டவணை II இன் படி ஆரம்ப மாதாந்த சம்பளப் படி ரூ. 43,312/- மற்றும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட பிற கொடுப்பனவுகளும் வழங்கப்படும். அதன்படி தோராயமாக ரூ. 61,112/- ஆரம்ப மாதாந்த மொத்த சம்பளம் கிடைக்கும்.

**வயது வரம்பு:**

18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மிகாமலும் இருத்தல் வேண்டும். உள் விண்ணப்பதாரர்களுக்கு இந்த வயது வரம்பு பொருந்தாது.

**மற்ற / பொதுவான சலுகைகள்:**

- ✤ சபையில் தற்போது நடைமுறையில் உள்ள விதிமுறைகளுக்கு ஏற்ப மருத்துவ உதவி வசதிகள் வழங்கப்படும்.
- ✤ தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் தனது சம்பளத்தில், ருந்து 10% ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்பாக செலுத்த வேண்டும், ,தற்கு சபை 15% பங்களிப்பு செய்யும்.
- ✤ சபை மேலும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு (ETF) அவரது/அவளது சம்பளத்தில், ருந்து 3% பங்களிப்பு செய்யும்.

**பொதுவான நிபந்தனைகள்:**

- ✤ அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கைப் பிரஜைகளாக இருத்தல் வேண்டும்.
- ✤ அனைத்து விண்ணப்பதாரர்களும் தீவின் எந்தப் பகுதியிலும் பணியாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் மன தகுதியுடன் நல்ல சுகாதார நிலையில் இருத்தல் வேண்டும்.
- ✤ அனைத்து விண்ணப்பதாரர்களும் நல்ல குணநலன்களைக் கொண்ட நபர்களாக இருத்தல் வேண்டும்.
- ✤ தெரிவு செய்யப்படும் வெளி விண்ணப்பதாரர்கள் 03 வருட பரீட்சார்த்த காலத்திற்கு உட்பட்டு நியமிக்கப்படுவார்கள், பதவியில் நிரந்தரப்படுத்தப்பட்ட உள் விண்ணப்பதாரர்கள் ஒரு வருட பரீசோதனைக் காலத்திற்கு உட்பட்டு நியமனம் செய்யப்படுவார்கள்.
- ✤ தெரிவு செய்யப்படும் அனைத்து வெளி விண்ணப்பதாரர்களும் தொடர்புடைய சம்பள விகிதத்தின் ஆரம்ப சம்பளப் படியில் நியமிக்கப்படுவார்கள். உள் விண்ணப்பதாரர்களுக்கு நிறுவன கையேட்டின் VII அத்தியாயம் 4ஆம் பிரிவின் கீழ் சம்பளம் நிர்ணயிக்கப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை :-**

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் சட்டத்தினால் ஏற்படுத்தப்பட்ட நிறுவனங்களில் சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் நிறுவனத் தலைவர்களின் சிபாரிசுடன் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். இந்த அலுவலகத்தில் இருந்து அல்லது **www.srilankateaboard.lk** இணையத்தளத்திலிருந்து பெறப்பட்ட நியமிக்கப்பட்ட படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரங்களைப் பிறப்புச் சான்றிதழின் பிரதியுடனும் தகுதி மற்றும் அனுபவம் தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகளுடனும் இணைத்து, 2026 ஜூலை மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கும் வண்ணம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும். விண்ணப்பப் பத்திரம் அனுப்பும் கடித உறையின் இடது மேல்பாகத்தில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்**

**இலங்கை தேயிலை சபை**

**574, காலி வீதி,**

**கொழும்பு 03.**